# டாக்டர் வா.செ.கு. கல்வி மற்றும் ஆய்வு அறக்கட்டளை

# 11–ஆவது ஆண்டு விழா, 19.07.2009

## தலைமை உரை மற்றும் அறிமுகயுரை டாக்டர் வா.செ. குழந்தைசாமி

வணக்கத்திற்குரிய தவத்திரு அடிகளார் அவர்களே, நண்பர் சைதை துரைசாமி அவர்களே மற்றும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசவிருக்கும் டாக்டர் பழனிசாமி, திரு. கார்மேகம், திரு. கந்தசாமி அவர்களே அறங்காவலர் பெருமக்களே, பெற்றோர்களே, மாணவச் செல்வங்களே, இவ்வறக்கட்டளையின் துணைத் தலைவர் திரு. தங்கராஜு அவர்களுடன் சேர்ந்து தவத்திரு அடிகளார் அவர்களையும், சைதை துரைசாமி அவர்களையும் மற்றும் சொற்பொழிவு நிகழ்த்த இருக்கும் அறிஞர் பெருமக்களையும் வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன்.

தவத்திரு அடிகளார் அவர்கள் இன்றிலிருந்து 10 ஆண்டுகட்கு முன்பு இந்நிறுவனத்தைத் துவக்கி வைத்தார்கள். அன்று முதல் இன்று வரை ஆண்டு தோறும் அதிகமான மாணவர்கள், அதிகமான பெற்றோர்கள் அதிகமான ஆசிரியர்கள் என வருடத்திற்கு வருடம் வளர்ந்து வருகிறது. 10 ஆண்டுகட்குப் பின்னர் 11–ஆவது ஆண்டில் மீண்டும் இந்நிறுவன விழாவைத் துவங்கி வைக்கவும், நான் அண்மையில் எழுதிய நூல் ஒன்றை வெளியிடவும் அதே சமயத்தில் 80 வயது நிறைவு பெறும் எனக்கு அன்பு கூர்ந்து வாழ்த்துத் தெரிவிக்கவும் அடிகளார் வந்திருக்கிறார்கள். அடிகளார் குன்றக்குடி மடத்தின் தலைவர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் தமிழகத்தில் உள்ள மடங்கள் அனைத்தும் வேறு, குன்றக்குடி மடம் வேறு என்பதை முழுமையாகப் பலர் அறிய மாட்டார்கள். ஓரளவு தமிழ் மக்கட்கு அதை எடுத்துச் சொல்வதும் ஒரு கடமையாகும் காலச் சென்ற மூத்த அடிகளார் அவர்களை நான் நெருக்கமாக அறிவேன். நான் மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்த பொழுது குன்றக்குடி மடத்துக்குச் சென்று அடிகளாரைச் சந்தித்தேன். அதற்குப் பின்னர் அடிகளார் அவர்கள் சென்னை வந்த பொழுதெல்லாம் பெரும்பாலும் நான் சந்திக்கத் தவறியதில்லை. பல நூற்றாண்டு பழமையும், மரபும் கொண்டவை தமிழகத்தில் உள்ள சைவ ஆதினங்கள். அவற்றின் செயல்பாட்டில் மாபெரும் புரட்சியை முதன் முதலாக உருவாக்கியவர் மறைந்த மூத்த அடிகளார் ஆவார். மடத்திற்கு மக்கள் வருவதுதான் வழக்கம் என்று இருந்ததை மாற்றி மடத்தின் தலைவர் மக்களை நாடிச் செல்லும் மரபை உருவாக்கியவர் குன்றக்குடி பெரிய அடிகளார். அறிவியலும், சமயமும் ஒன்றுக்கு ஒன்று எதிரானது என்பது போன்ற ஒரு தோற்றம் இருந்த சூழ்நிலையில் சற்றும் எதிர்பாராத விதமாக மக்களுக்கு அறிவியலையும்,

தொழில்நுட்பத்தையும் பற்றிச் சொல்வது மட்டுமின்றி அவற்றைப் பயன்படுத்தித் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வாய்ப்புகளையும், ஏற்படுத்தியவர் அடிகளார் ஆவர். அடிகளார் மறைவின் போது நான் எழுதிய கவிதையில்

அறிவியலும், ஆன்மீகமும் இணைந்து நிற்கும்
அற்புதத்தின் தந்தை இவன்

என்று கூறிவிட்டு

இசைபரவ வாழ்ந்தவர்கள் இறப்பதில்லை
எங்கள் தமிழ் கொள்கை இது: ஞானத் தேரில்
திசை முழுதும் தமிழ் பரவச் சென்றான், பண்டைத்
தேவார நுவரோடும் சேர்ந்தான் வாழ்க

பண்டைத் தேவார மூவரும் திசை முழுதும் தமிழ் பரவச் சென்றவர்கள்தான். ஆதின வாழ்வில் அடங்கியிருந்தவர்கள் அல்லர். அவர்கட்குப் பின்னர் 20–ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக ஆன்மீகத்தையும், அறிவியலையும் இணைத்த பெருமை பெரியவருக்கே உண்டு.

இந்தச் சமயத்தில் ஒரு செய்தியைச் சொல்வது பொருத்தம் என்று நம்புகிறேன். மைய அரசு அறிவியலை மக்கள் மன்றத்தில் பரப்புபவர்கட்கு ஆண்டு தோறும் ஒரு இலட்சம் ரூபாய், விருது வழங்குகிறது. அந்த விருதுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் நான் ஐந்தாண்டுகள் உறுப்பினனாக இருந்தேன்.

1991 விருதுக்கான தேர்வுக் குழுக் கூட்டத்தில் அதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டவர்கள் பட்டியலைக் குழுவுக்கு வைத்தனர். அந்தப் பட்டியல் இரண்டு பிரிவுகளைக் கொண்டது பரிந்துரைக்கப்பட்டவர்களில்:

1. விருதுக்கு வேண்டிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்கள்
2. விருதுக்கு வேண்டிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள்

மதுரை பல்கலைக்கழகத் துணை வேந்தரால் பரிந்துரைக்கப்பட்டிருந்த குன்றக்குடி அடிகளாரின் பெயர் விருதுக்குத் தகுதி பெறும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் பட்டியலில் இருந்தது. கூட்டம் நடந்தது கொல்கத்தாவைச் சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கு அந்த விருது வழங்கப்படும் என முடிவு செய்யப்பட்டது. முடிவு செய்த பின்னர் முடிவு பற்றிக் கையெழுத்திடுவதற்கு முன்னர் நான் அந்தத் துறையின் செயலர் அவர்களை என்ன அடிப்படையில் குன்றக்குடி அடிகளார் அவர்கள் விருதுக்குத் தகுதி பெறும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்ற முடிவுக்கு வந்தீர்கள் என்று கேட்டேன், அதற்கு அவர் சொன்ன பதில்:

அடிகளார் அவர்கள் அறிவியலையும், தொழில்நுட்பத்தையும் மக்கள் பயன்படுத்தித் தொழில்கள் தொடங்குவதற்கும் வருமானத்தைப் பெருக்குவதற்கும் பெரிய அளவில் மடத்தின் சூழ்நிலையில் வாழும் மக்களிடையே தொண்டு செய்திருக்கிறார்கள். ஆனால் மக்கள் மத்தியில் அறிவியலைப் பரப்பும் முயற்சியை மேற்கொள்ளவில்லை என்று கூறினார். அதாவது அறிவியலைப் பரப்புவதற்கான பிரச்சாரத்தை மேற்கொள்ளவில்லை என்பது அவர் கருத்து. அதற்கு நான் கூறிய பதில்:

அறிவியல் ராமாயணம் போல, மகாபாரதம் போலப் பிரச்சாரத்தினால் மட்டும் பரப்பப்படுவது அன்று, மக்களுக்கு அதில் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்கு அது அடிகளார் செய்வது போலப் பயன்படுத்துவதன் மூலம் தான் செய்ய முடியும். அறிவியல் பயன்பாட்டின் மூலம் பரப்படுவதே அன்றி பிரச்சாரத்தினால் பரப்பப்படுவது அன்று என்று கூறினேன். குழுவின் தலைவர் அதை முழுமையாக ஏற்றுக் கொண்டார் மற்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர். அப்படியானால் பரிந்துரைக்கப்பட்டவர்களில் அடிகளார் பெயரையும், கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலை வந்தது. ஓர் இக்கட்டான சூழ்நிலை எழுந்தது. தேர்வுக்குரிய நிறுவனத்தை முன்பே முடிவு செய்திருக்கிறோம். இப்பொழுது கருதப்பட வேண்டிய இன்னொரு பரிந்துரை எழுந்திருக்கிறது. அடிகளார் பெயர் கருதப்பட்டால் அவர் மற்ற எல்லோரையும் விடத் தகுதியுடையவர் என்று அந்த நிறுவனத்தின் செயலரே ஒப்புக் கொண்டார். கையெழுத்திடாதவரை குழுவின் முடிவு மறுபரிசீலனை செய்யப்படலாம் என்ற கருத்தை நான் முன் வைத்தேன். சற்று நீண்ட ஆலோசனைக்குப் பின் அந்த ஆண்டு விருதை இரண்டாகப் பிரித்து கொல்கத்தா நிறுவனத்திற்கும், அடிகளாருக்கும் வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இந்திய முழுவதற்குமாக சேர்த்து அந்த நாள் வரை அறிவியலைப் பரப்புவதற்கு ஓர் ஆன்மிகவாதி தேர்வு செய்யப்பட்டுத் தேசிய விருது பெற்றது குன்றக்குடி மடத் தலைவர் அவர்கள் தான். நம் முன் அமர்ந்திருக்கும் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் அந்தப் பாரம்பரியத்தின் வாரிசாக அடிகளார் விட்டுச் சென்ற பணியை முன் எடுத்துச் சென்று தமிழ் பரப்புபவர், அறிவியல் பரப்புபவர், ஆய்வு உணர்வை வளர்ப்பவர் நமது அடிகளார் அவர்கள்.

அடுத்து சைதை துரைசாமி அவர்கள், அவர் நம்முள் ஒருவர்: நமது ஊர்க்காரர், என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். அவர் செய்து வரும் கல்விப் பணி ஓரளவு நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். அவர் பணியின் வளர்ச்சியையும், முக்கியத்துவத்தையும், நீங்கள் அறிய வேண்டும். இந்திய துணைக் கண்டத்தை உண்மையிலேயே ஆள்பவர்கள் I.A.S., I.P.S., மற்றும் மைய அரசுப் பணியைச்

சேர்ந்தவர்கள்தான். அதில் பெரும்பாலும் வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களே தேர்வு பெற்று வந்தார்கள். தமிழ்நாட்டிலிருந்து அந்தத் தேர்வை எழுபவர்களும், தேர்வு பெறுபவர்களும் குறைவு. இந்த நிலையை மாற்றுவது தமிழகத்திற்குச் செய்யும் மாபெரும் பணியாகும். இதற்காக இவர் ஏற்படுத்தியிருக்கும் மனித நேய அறக்கட்டளை மூலம் உண்மையிலேயே சிறந்த வெற்றி கண்டிருக்கிறார். சென்ற ஆண்டு 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், இந்த ஆண்டு 21 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதுவரை செல்வந்தருடைய மக்கள் பெரிய நகரத்திலிருந்து பெருமை வாய்ந்த கல்வி நிலையங்களில் படித்தவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இப்பொழுது கிராமத்து மாணவர்கள் ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்தவர்கள், இப்படிப்பட்ட வாய்ப்புகளை எண்ணியே பார்க்காதவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். தமிழகத்திற்கு இதைவிட வேறு சிறந்த தொண்டு இருக்க முடியாது. விருது பெற்ற மாணவர்களைப் பாராட்டும் நாம் நண்பர் சைதை துரைசாமியையும் மனம் திறந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து டாக்டர் பழனிசாமி பணிபுரிவது அமெரிக்காவாக இருந்தாலும் முந்தைய கரூர்த் தாலுக்காவை இன்றைய கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்: எதிரில் அமர்ந்திருக்கும் மாணவர்கள் போலவே இங்குள்ள பள்ளிகளில் பயின்று, பின்னர் அமெரிக்காவுக்குச் சென்று டாக்டர் பட்டம் பெற்று அங்கு பொறுப்பில் இருப்பவர். அவரைப் போன்றவர் உங்கட்கெல்லாம் நாமும் இந்த அளவுக்கு முன்னுக்கு வரலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துபவர் என்பதை நான் கூற வேண்டும். திரு. கார்மேகம், திரு. கந்தசாமி ஆகியோர் கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய உதவிக்கு நாம் நன்றியுடையவர்கள்.

இன்று விருது பெற வந்திருக்கும் ஒவ்வொருவரும் நீங்கள் படித்த பள்ளியில், படித்த வகுப்பில் சிறப்பாகத் தேறி, முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்கள் உங்களுடைய வெற்றி இத்துடன் நின்று விடுவதில்லை. உங்களைப் போன்ற திறமையுள்ளவர்கட்கு வருங்கால இந்தியாவில் எண்ணற்ற வாய்ப்புகள் காத்திருக்கின்றன. பொருளாதார நிலைமைக் காரணமாகச் சில தடைகளைச் சந்திப்பவர்கட்கும், பல விதமான நிதியுதவிகள் இருக்கின்றன. 12–ஆவது வகுப்பு வரை எல்லோருக்கும் பக்கத்திலேயே படிக்கும் வாய்ப்புகள் உருவாகி இருக்கின்றன. தனியார் கல்லூரிகளும் பரவலாக ஆங்காங்கு துவங்கப்படுவதால் உயர்கல்வியும், அவ்வளவாகத் தூரத்தில் இல்லை.

பொதுவாகக் கல்வியில் தென் மாவட்டங்கள் தான் முன்னிலையில் இருந்தன. கொங்கு நாடு கோவை தவிர பொதுவாகப் பின் தங்கிய நிலையிலேயே இருந்து

வந்தது. கடந்த சில ஆண்டுகளாக நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. கொங்கு நாட்டிலும் முதல் நிலையில் தேறுபவர்கள், உயர் சதவிகிதத்துடன் தேர்ச்சி பெறும் மாணவர்கள் வந்து கொண்டிருக்கின்றன. இது ஒரு வரவேற்கத்தக்க வளர்ச்சியாகும்.

இது அண்ணா நூற்றாண்டு, அரசியல் தலைவர்களில் தனிப்பட்ட முறையில் அண்ணாவைப் போன்று மக்கள் மத்தியில் முன்னிலைப்படுத்தியவர் யாருமில்லை. எனக்குத் தெரிய ஒவ்வொரு வீட்டிலேயேயும் நூல் நிலையம் இருக்க வேண்டும் என்று கூறி வந்த ஒரே தலைவர் அண்ணா தான். இந்த அண்ணா நூற்றாண்டில் கரூர் மாவட்டத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகள் தங்கள் நூல் நிலையத்தை மேம்படுத்த வேண்டும் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலப்பல பள்ளி

உருவாக வேண்டும் என்று பாடினார் பாரதி.

வீடு தோறும் கலையின் விளக்கம் இருக்க வேண்டுமானால், வீடு தோறும் நூல் நிலையம் இருக்க வேண்டும். வீடு தோறும் நூல் நிலையம் அமைக்கும் நிலைமை இன்றைய கிராமக் குடும்பங்களில் இல்லை. எனவே கிராமத்து மாணவர்கள் பொது அறிவு பெற வேண்டுமானால் பள்ளியில் உள்ள நூல் நிலையங்களில் நூல்களை எடுத்துப் படித்துத்தான் பெற முடியும் எனவே வீடு தோறும் படிக்கும் மாணவர்களாவது கலையின் விளக்கம் பெற உதவும் வழியில் பள்ளி தோறும் சற்று பெரிய நூல் நிலையங்களை உருவாக்க வேண்டும்.

எல்லாப் பள்ளிகளிலும் தங்கள் சொந்தச் செலவில் நூல் நிலையங்களைப் பெரிதுப்படுத்துவதுச் சற்று கடினம், நமது சமுதாயத்தில் இன்னும் நல்ல நோக்கங்களுக்கு சிறிய அளவில் நிதி உதவி செய்பவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு பள்ளியும் அதன் நூல் நிலையத்திற்கு ஒரு நூல் நிலையப் புரவலரைத் தேடிப் பிடிக்க வேண்டும். கரூர் மாவட்டம் முழுவதுமாக 150 பள்ளிகள் இருக்கின்றன. கரூர், வெள்ளகோவில், தென்னிலை, சின்ன தாராபுரம், வரை 150 புரவலர்களைத் தேடிக் காண்பது அரிதல்ல. திரு. தங்கராஜ் அவர்களே ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு நூலாக வழங்கியிருக்கிறார். எனவே ஒருவர் ஒரு பள்ளிக்கு ஆண்டு தோறும் 250, 300 நூல்கள் வாங்கினாலே ஒரு சிறந்த நூல் நிலையம் உருவாகிவிடும். நூல் நிலைய அறை பெரிதாக இருக்க வேண்டும் என்ற பிரச்சினையை நான் அறிவேன். அதுவும்

தீர்க்க முடியாத பிரச்சினை அன்று மொத்தத்தில் அரசு என்ன அக்கறை காட்டினாலும் பொது மக்கள் ஈடுபாடு இல்லாமல். நமது கல்விச் சூழலை மேம்படுத்த முடியாது. அந்தந்தப் பள்ளி நிர்வாகிகள் இதில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டும்.

மாணவர்களைப் பொருத்தவரை இன்று எந்தக் குடும்பத்தில் எந்தச் சூழ்நிலையில் பிறந்தாலும் உழைப்பும், உறுதியும் இருந்தால் முன்னுக்கு வருவது முடியாத காரியம் அல்ல.

உழைப்புக்கு அடுத்ததாகத் தன்னம்பிக்கை வேண்டும். தன்னம்பிக்கை இருந்தால் எல்லா வெற்றிக்கும் தடம் தெரியும், தன்னம்பிக்கை இல்லாவிட்டால் வாய்ப்புகள் எதிரில் வந்து நின்றாலும் கண்ணுக்குத் தெரியாது. ஒரு சான்று கூற விரும்புகிறேன்.

இரண்டு மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்குச் சென்றார்கள், நேர்முகத் தேர்வு முடிந்த பிறகு ஒவ்வொரு மாணவரையும் தேர்வு நடத்தியவர்கள் ஒரு கேள்வி கேட்டனர்.

> “நீ இந்தத் தேர்வில் வெற்றி பெறாவிட்டால் என்ன நினைப்பாய் என்பது கேள்வி. அதற்கு ஒரு மாணவன் சொன்ன பதில்: இது இந்தியாவிலேயே தலை சிறந்த நிறுவனம், இன்றும், நாளையும் விரிவடையத்தக்க நிறுவனம். இடம் பெற்றிருந்தால் என் வாழ்க்கையின் முன்னேற்றம் உறுதியாகியிருக்கும். அதை இழந்து விட்டேனே என்று வருந்துவேன் கூறினான். இன்னொரு மாணவன் நான் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றிருக்கிறேன். எந்தப் பணியானாலும் வெற்றிகரமாக செய்யும் திறமை எனக்குண்டு என்னைத் தேர்ந்தெடுக்காததன் மூலம் என்னைப் போன்ற ஒரு திறமைசாலியை இழந்து விட்டீர்களே என உங்கள் மீது அனுதாபப்படுவேன்”

என்று கூறினான்.

இது தன்னம்பிக்கையின் உச்ச நிலை: சற்று தலைக்கனம் போலத் தோன்றலாம் இருந்தாலும் தவறில்லை.

வாழ்க்கையின் முன்னேற்றம் நமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பொருத்திருக்கிறது. வாய்ப்புகள் நம்மைத் தேடி வருவதில்லை. நாம் தான் வாய்ப்பைத் தேடிக் காண வேண்டும். Francis Bacon என்ற அறிஞன் கூறினான் அதிர்ஷ்ட்டத்திற்குக் கண் குருடாக இருக்கலாம். எனவே அதற்கு நம்மை அடையாளம் தெரியாது, ஆனால் அதிர்ஷ்டம் கண்ணுக்குத் தெரியக் கூடியது. அதை நாம் தான் அடையாளம் காண வேண்டும். ஒரு சிறு கதை கூற விரும்புகிறேன்.

சொர்க்கத்தின் வாயிலில் புனித பீட்டர் நின்று கொண்டிருந்தான். அவர் தான் தகுதி கருதி ஒருவரைச் சுவர்க்கத்திற்குள் அனுமதிப்பதும், அனுமதிக்காததும் என்ற பொறுப்பை ஏற்றனர். அந்த சொர்க்கத்தை நாடி ஒரு பொறியியல் வல்லுநனர் வந்தார். பீட்டர் அவரைப் பார்த்துச் சொர்க்கத்திலிருப்பதற்கு நீ என்ன தகுதிகளைப் பெற்றிருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அந்தப் பொறியியல் வல்லுநர் சொன்னார். ஐயா நான் ஒரு பொறியியல் வல்லுநனன், எனக்கு அதிகமாகப் பேசத் தெரியாது தாங்கள் எனக்கு நிரந்தரமாகச் சொர்க்கத்தில் இடம் கொடுக்க வேண்டாம். நான் ஒரு Engineer உங்கள் சொர்க்கம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு என்னை அனுமதியுங்கள். நான் திரும்ப உலகத்திற்கே போய் அங்கு ஒரு சொர்க்கத்தை உருவாக்குவேன் என்றார்.

எனவே வாழ்க்கையில் உங்களுடைய வாய்ப்புகளை நீங்களே உருவாக்க வேண்டும். நமது சொர்க்கம் நமது கையில் இருக்கிறது.

# தமிழ் நாட்டில் பள்ளிகள்

மொத்தம் 34342 பள்ளிகள். அவற்றில் 1 முதல் 5 வகுப்புகள் 24310 அரசு பள்ளிகள். 5637 அரசு உதவிப் பெறும் பள்ளிகள், அரசு உதவிப் பெறாத பள்ளிகள் 4995.

தமிழகத்தில் உள்ள நடுநிலைப் பள்ளிகள் 8718. இவற்றில் அரசு பள்ளிகள் 6487. அரசு உதவி பெறும் பள்ளிகள் 1679. அரசு உதவிப் பெறாதா தனியார் பள்ளிகள் 552.

மொத்தத்தில் துவக்கக் கல்வி நிலையில் அரசு உதவிப் பெறாதா தனியார் பள்ளிகள் 13 சதவிகிதம் தான்.

80 சதவிகிதத்திற்கு அதிகமான குழந்தைகள் அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் தான் படிக்கிறார்கள்.

# அகில இந்திய அளவில் நிலைமை

இந்தியாவில் தனியார் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

- 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை தனியார் பள்ளிகளில் 2005 16.4 சதவிகிதமாக இருந்தது.
- 2008–இல் அது 22.5 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.
- அகில இந்திய அளவில் தனியார் பள்ளிகளும், 2004–2005–இல் 11.15 சதவிகிதமாக இருந்தது. இது 2006–2007–இல் 1886 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

சென்னை மாநகராட்சியில் தற்போது ஒவ்வொரு ஆண்டும் சுமார் 70 கோடி ரூபாய் துவக்கக் கல்வி வரியாகச் சொத்து வரி செலுத்துபவரிடம் வசூலிக்கப்படுகிறது, அதில் செலவலிக்கப்படாமல் 01.04.2009 இருக்கும் தொகை 120 கோடி மாநகராட்சி பள்ளிகள் 300 அவற்றில் 250 பள்ளிகள் துவக்க நடுநிலைப் பள்ளிகள்.